2125

சுருக்கம்

பொதுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திரு.P.கஜேந்திரகுமார் (தா/பெ. (லேட்) G.வடிவாம்பாள்) – இளநிலை உதவியாளர் பணிநியமனம் – விதித்தளர்த்தி பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (எடி2) துறை

அரசாணை (2ப) எண்.143

நாள் : 28.11.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, கார்த்திகை – 13

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. மருத்துவக் கல்வி இயக்குநர் (பொ) அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.15387/நி2/4/2020, நாள். 09.03.2020.

மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம்
03 DEC 2020
சென்னை 10

******

ஆணை:-

பார்வையில் படிக்கப்பட்ட மருத்துவக் கல்வி இயக்குநர் (பொ) கடிதத்தில் சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிற்றேவலராகப் (Lascar) பணியாற்றிக் கொண்டிருந்தபோது திருமதி.G.வடிவாம்பாள் என்பவர் 24.05.2004 அன்று பணியிடையே மரணமடைந்து விட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 17.12.1957 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.12.2017 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மகன் தனக்கு பணிநியமனம் வேண்டி 13.04.2005, 15.02.2007, 03.07.2008 மற்றும் 09.07.2008 நாளிட்ட கடிதங்களின் மூலம் விண்ணப்பித்துள்ளார் என்றும், அவரின் பிறந்த தேதி 14.01.1991 ஆகும் என்றும் அரசு ஊழியர் இறந்த நாளான 24.05.2004 அன்று அவரது வயது 13 ஆண்டுகள் 04 மாதங்கள் 11 நாட்கள் ஆகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2. மேலும், திரு.P.கஜேந்திரகுமார் கருணையடிப்படையில் பணிநியமனம் பெற போதிய கல்வித் தகுதி பெற்றிருந்ததாலும், மூன்றாண்டு காலக்கெடுவுக்குள் விண்ணப்பம் சமர்ப்பித்திருந்ததாலும், குடும்பம் வறுமை சூழலில் உள்ளது என்றும், இறந்த அரசு ஊழியர் குடும்பத்தில் எவரும் அரசு / தனியார் துறையில் பணியில் இல்லை என்றும், இறந்த அரசு ஊழியர் குடும்பத்திற்கு அசையும் / அசையாச் சொத்துக்கள் ஏதுமில்லை என்றும் சென்னை மாவட்டம்,

(த.பி.பா.)

புரசைவாக்கம் வட்டாட்சியர் சான்றளித்திருந்ததாலும், மனுதாரர் கருணையடிப்படையில் பணிநியமனம் பெற ஆட்சேபம் இல்லை என அரசு ஊழியர் குடும்பத்தில் இதர நபர்கள் எழுத்து மூலமாக தெரிவித்திருந்ததாலும், மற்றும் கருணையடிப்படையில் பணிநியமனம் பெற இதர நிபந்தனைகளை விண்ணப்பதாரர் நிறைவு செய்திருந்ததாலும், மனுதாரர் திரு.P.கஜேந்திரகுமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு, அவர் 28.02.2019 அன்று முற்பகல் பணியில் இணைந்துள்ளார் எனத் தெரிவித்து, தனியர் அரசுப் பணியில் சேர்ந்த நாளான 28.02.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

3. மருத்துவக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, தனியர் விண்ணப்ப நாளன்று 18 வயதினைப் பூர்த்தி செய்யாததால் உரிய அரசாணை மற்றும் பிரிவுகளைத் தளர்த்தி அதனை ஏற்று கொள்ளக் கருதியது. அதன்படி P.கஜேந்திரகுமார், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை அவர் அமைச்சுப் பணியில் இணைந்த நாளான 28.02.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்ய ஏதுவாக, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020, தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20 (6)(b) (வயது குறித்தது), பிரிவு 28(2) (பணப்பலன்கள் வழங்குவது குறித்தது) ஆகியவற்றை மேற்படி சட்டத்தின் பிரிவு 58-ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தளர்த்தி, திரு.P.கஜேந்திரகுமார் பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் சேர்ந்த நாளான 28.02.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் இசைவுகளை முறையே அவற்றின் அ.சா.எண்.17989/க்யூ1/2020-1, நாள் 19.11.2020 மற்றும் அ.சா.எண்.30803/ஜி2/2020-1, நாள் 23.11.2020-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை-600 010.
திரு.P.கஜேந்திரகுமார், இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-600 018.
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை,சென்னை-600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

02/12/2020
பிரிவு அலுவலர்
2/12/2020